செ.வெ.எண்: 182 நாள்:17.03.2018

திருநெல்வெலி மாவட்டம் ஏர்வாடி எஸ்.வி. இந்து துவக்கப்பள்ளி ஆண்டு விழாவின் போது மின்விளக்கு ஒளியால் கண்பாதிப்பு உள்ளாகிய மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்களை திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

----

திருநெல்வெலி மாவட்டம் ஏர்வாடி எஸ்.வி. இந்து துவக்கப்பள்ளி ஆண்டு விழாவின் போது மின்விளக்கு ஒளியால் கண்பாதிப்பு உள்ளாகிய மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்களை திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.03.2018) பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:

ஏர்வாடி எஸ்.வி. இந்து துவக்கப்பள்ளியில் நேற்று ஆண்டுவிழா நடைபெற்றுள்ளது. இவ்விழாவின் போது கூடுதல் மின்விளக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பள்ளியில் 90 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். 5 ஆசிரியர்கள் உள்ளனர். விழா முடிந்து அனைவரும் வீடுகளுக்கு சென்று விட்ட நிலையில் இரவு 12 மணிக்கு மேல் பல்வேறு குழந்தைகள் பெற்றோர்களுக்கு கண் சிவந்து கண்ணில் நீர் வடிந்துள்ளது. முன்பகுதியில் அமர்ந்திருந்த 60 க்கு மேற்பட்ட மாணவ, மாணவியர்களுக்கும் 40 பெற்றோர்களுக்கும் இப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் திருநெல்வேலி அரவிந்தி கண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கண் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. தகுந்த சிகிச்சைகளும் செய்யப்பட்டுள்ளது. கண்மருத்துவர்கள் கண்பார்வைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும், மருத்துவமனையில் தங்க வேண்டியது இல்லை எனவும், இரண்டு தினங்களில் சிவந்த நிலையில் உள்ளது மாறிவிடும் என தெரிவித்துள்ளார்கள். இருப்பினும் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மற்றும் சுகாதார பணிகள் துணை இயக்குநர் மூலம் கண்பரிசோதனை குழு அமைக்கப்பட்டு ஏர்வாடி பள்ளியில் முழுமையாக குணமடையும் வகையில் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் திருநெல்வேலி மாவட்டதில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் விழாக்களின் போது எவ்வகையான மின்விளக்குகளை பயன்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து பல்வேறு துறைகளின் மூலம் ஆய்வு செய்து அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கும் தகுந்த சுற்றரிக்கை வழங்கப்படும். என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கண்ணன், சுகாதார பணிகள் துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், திருநெல்வேலி அரவிந்த் கண்மருத்துவமனை தலைமை மருத்துவர் ராமகிருஷ்ணன், நாங்குநேரி வட்டாட்சியர் திரு.வர்கிஷ், நாங்குநேரி துணை வட்டாட்சியர்கள் திரு.குமார், திருமதி.முருகேஸ்வரி மற்றும் அலுவலர்கள் மருத்துவர்கள் உள்ளனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.